# ” பொன்னியின் செல்வன்” புதினத்தில் மனங்கவர்ந்த கதாபாத்திரம் – ஆழ்வார்க்கடியான்

4

ச. நர்மதா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600108.

**ஆய்வுச் சுருக்கம்**:

அமரர் கல்கியின் காலத்தை வென்ற காவியமான “பொன்னியின் செல்வன்” கதாபாத்திரங்களின் தாக்கம் – ஆய்வாளர்களின் பார்வையில் என்பதனை குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது. பல்வேறு கதாபாத்திரங்கள் இருந்தாலும் என்னை மிகவும் கவர்ந்த கதை மாந்தரான் ஆழ்வார்க்கடியான் நம்பி பற்றியும், அவருடைய இயல்புகள், பண்புகள், இக்கதையில் நம்பியின் முக்கியத்துவம் ஆகியவற்றை குறித்தும் எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**:

இரா. கிருஷ்ணமூர்த்தி என்ற இயற்பெயர் கொண்ட அமரர் கல்கி பல சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் எழுதியுள்ளார். அவருடைய மாபெரும் படைப்பான “பொன்னியின் செல்வன்” 1950 முதல் 1954 முடிய, கல்கி வார இதழில் தொடர்கதையாக வெளிவந்து மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற புதினம். பின்னர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பல முறை தொடர்கதையாக வெளியிடப்பட்டு, தனி நூலாகவும் பல பதிப்புகள் வந்துள்ளது. சோழ பேரரசை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இப்புதினம் பலமுறை நாடகமாகவும் அரங்கேற்றப்பட்டுள்ளது. இபொழுது பெரும் முயற்சிக்கு பிறகு திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது.

என்னுடைய மனங்கவர்ந்த “பொன்னியின் செல்வன்” கதாப்பாத்திரமான ”**ஆழ்வார்க்கடியான் நம்பி”** பற்றி இக்கட்டுரை விவரிக்கின்றது. சோழ பேரரசின் முதல் மந்திரி அநிருத்த பிரம்மராயரின் சீடன், சோழ சாம்ராஜ்யத்தின் தலைச்சிறந்த ஒற்றன், நந்தினியின் வளர்ப்பு சகோதரன், வந்தியதேவனின் நண்பன் என்று பல முகங்களைத் தாங்கி நிற்கும் ஆழ்வார்க்கடியான் வந்தியதேவனைப் போலவே கதை நெடுகிலும் உலவும் பாத்திரம். கதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பயணிப்பவர். அவ்வகையில் அவரின் பண்புகள், இயல்புகள், மதிநுட்பம், நடுநிலையாமை, நகைச்சுவை உணர்வு, தன்னிலை மாறாமை போன்ற அவரின் இயற்குணங்களை பற்றி முழுமையாக ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சோழர்கள்**:

சங்க இலக்கியம் எனப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவையும், பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் சங்க காலச் சோழர் வரலாற்றை அறிய ஏதுவாக அமைந்தவை. இடைப்பட்ட, பிற்கால சோழர்களை பற்றி அறிய உதவி புரிபவன கல்வெட்டுகளும், செப்பேடுகளும் என்று கூறினால் அது மிகையாகாது. “இன்னின்ன இடங்களில் இன்னவரை வென்ற இன்ன அரசன் பட்டம் பெற்ற இன்ன ஆண்டில்...... என்று விளக்கமாக வரும்

முதற் பகுதியே வரலாற்றுக்குப் பெருந்துணை செய்வதாகும்”[1] என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் தன் “சோழர் வரலாறு” என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விசயாலய சோழன் கட்டமைத்த பலமான அஸ்திவாரத்தின் மீது பிற்கால சோழர்கள் தங்கள் பேரரசை நிறுவினர். ஆனால் சோழ பேரரசை மகோன்னந்த நிலைக்கு கொண்டு சென்றவர்களுள் முக்கியமானவர் முதலாம் இராசராசன். “விசயலயற்குப் பின்வந்த சோழர்களிற் சோழப் பேரரசை நன்கனம் அமைத்து நிலைபெறச் செய்த பேரரசன் இராசராசனே ஆவன்”[2] என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் தமது “சோழர் வரலாறு” என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**பொன்னியின் செல்வன் கதைக்களம்**:

முதல் பராந்தக சோழரின் பெயரனும், அரிஞ்சயரின் புதல்வருமான இரண்டாம் பராந்தகர் என்னும் சுந்தர சோழர் ஆட்சிக் காலத்தில் கதை நடப்பதாக எழுதப்பட்டுள்ளது, சுந்தர சோழர் மக்களான ஆதித்த கரிகாலர், அருண்மொழிவர்மன், குந்தவை ஆகியோருடன், அநிருத்த பிரம்மராயர், பழுவேட்டரையர்கள், சம்புவரையர், வந்தியதேவன் என்று வரலாற்று கதாபாத்திரங்களோடு கற்பனை கதை மாந்தர்களான ஆழ்வார்க்கடியான், நந்தினி, பூங்குழலி போன்றோரும் உலவும் புதினம் இது. ஆதித்த கரிகாலன் துர்மரணம், மற்றும் அருண்மொழிவர்மனின் அரசுரிமை மறுத்தல் ஆகியவையும் இதில் பேசப்படும் முக்கிய வரலாற்று செய்திகளாகும். இவ்விரு செய்திகளை திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

**ஆழ்வார்க்கடியான் தோற்றம்**:

பொன்னியின் செல்வன் புதினத்தின் முதலாம் பாகம் “புது வெள்ளம்” இரண்டாம் அத்தியாத்திலேயே ஆழ்வார்க்கடியான் நம்பியின் அறிமுகம் நடக்கிறது. முதல் அத்தியாயம் கதையை முன்னோக்கி எடுத்து செல்பவரான வந்தியத்தேவனுக்கு என்றால் இரண்டாம் அத்தியாயம் நம்பிக்கு, இதுவே அவருடையது முக்கிய கதாபத்திரம் என்பதற்கு சான்றாகும். “வாதமிட்ட மூவரில் ஒருவர் உடம்பெல்லாம் சந்தனம் அணிந்து தலையில் முன்குடுமி வைத்திருந்த வைஷ்ணவ பக்த சிகாமணி, கையில் அவர் ஒரு குறுந்தடியும் வைத்திருந்தார். கட்டையாயும், குட்டையாயும் வைரம் பாய்ந்த திருமேனியுடன் விளங்கினார்”[3] என்று கல்கி, அவரின் தோற்றத்தை வர்ணிக்கிறார்.

**நகைச்சுவை உணர்வு**:

அறிமுக அத்தியாயத்தில் வைணவத்திற்கு ஆதரவாக அவர் போடும் சண்டையே அவருடைய நகைச்சுவை உணர்வை நமக்கு உணர்த்திவிடும். அந்த விவாதங்கள் நமக்குச் சிரிப்பை வரவழைப்பதாகவும் மகழ்ச்சிகரமானதாகவும் அமைவது அதன் சிறப்பு. இடும்பன்காரியிடம் வேதாளமுடன் பேசிக் கொண்டிருந்தேன் என்று கூறுமிடம் அதற்கு மற்றொரு சான்று. இலங்கை மாதோட்ட காவலில் வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியான் இடையே பூனை பற்றிய உரையாடல் மற்றொரு நிரூபணம். சாதரண பூனையை வீரசைவ பூனையாக மாற்றி அதை திருச்சாத்து சாத்துவேன் என்று வைணவர் சொல்வது சிரிப்பை வரவழைக்கும் இடம். வந்தியத்தேவன், கடம்பூர் சம்புவரையர் குதிரை லாயத்தில் இருந்து இரண்டு குதிரைகளை கொண்டு வரலாம், என்று கூறும் பொழுது, “நான்

சுவர் ஏறிக் குதிப்பேன். ஆனால் குதிரைகளுக்குச் சுவர் ஏறிக் குதிக்கத் தெரிய வேண்டுமே?"[4] என்கிறார் நம்பி. அவருடைய நகைச்சுவை உணர்வை பிரதிபலிக்கும் வரிகள் இவை.

**ஒற்றறிதல்**:

"மறைந்தவை கேட்கவற் ஆகி, அறிந்தவை
ஐயப்பா இல்லாத ஒற்று"[5] என்று வள்ளுவ பெருந்தகை, ஒற்றறிதல் பற்றி அவருடைய ஒற்றாடல் அதிகாரத்தில் கூறுகிறார். எதிரி மறைத்த செய்திகளை எவ்வகையிலேனும் அறிந்து கொள்வதில் வல்லவனாகவும், அந்த செய்திகளைச் சந்தேகத்திற்கு இடமின்றியும் அறிந்து சொல்பவனே சிறந்த வேவுக்காரன் ஆவான் என்பதே இதன் விளக்கம். இது அப்படியே ஆழ்வார்க்கடியானுக்கு பொருந்தும். கடம்பூர் மாளிகை சதி தெரிந்து கொள்வது, இடும்பகாரியை பின்பற்றி திருப்புறம்பியம் பள்ளிப்படையில் பாண்டிய ஆபத்துதவிகளின் சதித்திட்டம் பற்றி அறிந்து கொள்வது என்று இப்படி கதை நெடுக தன் ஒற்றறியும் வேலையை செவ்வனே செய்கிறார் நம்பி. சம்புவரையர் வேட்டை மண்டபத்திற்கு போகும் ரகசிய வழியை வந்தியத்தேவனுடன் சேர்ந்து கண்டுபிடிப்பது என சோழ பேரரசின் தலைச்சிறந்த ஒற்றன் என்பதை உறுதிப்படுத்தி கொண்டு இருப்பவர்.

**வீரமும், விவேகமும்**:

ஆழ்வார்க்கடியான் சோழ ஒற்றன் என்பது கதையில் ஆரம்பத்தில் தெரியா வண்ணம் கல்கி கொண்டு செல்வது சுவாரசியம். அவருடைய மதிநுட்பமும் விவேகமும் புதினத்தின் பல இடங்களில் வெளிப்பட்டு நம்மை பரவசத்தில் ஆழ்த்தும். வந்தியத்தேவன் கடினமாக அறிந்து கொள்ளும் உண்மைகளை மிக எளிதாக போகிற போக்கில் சொல்வது, ஊமை ராணி மந்தாகினியைப் பற்றி, பலரும் அறியாத பல ரகசியங்களை அறிவது என்று அவருடைய விவேகம் வெளிப்படும் இடங்கள் அனேகம். வந்தியத்தேவனை ஆபத்துதவிகளிடமிருந்து திருப்புறம்பியம் பள்ளிப்படையில், காலாமுகராக வந்து காப்பாற்றுதல், தேவராளனிடமும் அவனுடைய நாயிடமிருந்தும் காத்தல் என்று ஒற்றனுக்கு உரிய லட்சணமாக தைரியம், நெஞ்சுறுதி கொண்டவர். வீரமும் விவேகமும் ஒன்றிணைந்தவர். விதி மேல் நம்பிக்கையில்லை என்றும் கூறும் மதியூகி.

**நிதானம்**: (பொறுமை)

வந்தியத்தேவனுடைய அவசரமிக்க குணத்திற்கு நேர் எதிராக நிதானமாகவும், பொறுமையாகவும் சிந்திப்பவர். அறிவுப்பூர்வமாக ஆலோசனை சொல்பவர். அநிருத்த பிரம்மராயரின் தூதுவர். வைத்தியர் மகன் பினாகபாணியை சிறையில் அடைக்க தன் மதியால் வழிவகித்தவர். தன் உயிருக்கு ஆபத்து வரும் வேளையில் கூட தன்னிலை இழக்காதவர். அநிருத்த பிரம்மராயர் வந்தியத்தேவனை பின் தொடர ஆழ்வார்க்கடியானை அனுப்புகிறார். ஏன் என்று கேட்கும் இளைய பிராட்டியிடம் வந்தியத்தேவன் வீரன் தான் நிதானம் இல்லாமல் ஆபத்தில் சிக்கிக் கொள்பவன், அதனால் வீரமும் விவேகமும் நிறைந்த தன் சீடன் ஆழ்வார்க்கடியானை அனுப்புவதாக சொல்கிறார். மூன்றாம் பாகம்" ஒற்றனுக்கு ஒற்றன்" என்ற இருபத்தியெட்டாம் அத்தியாயத்தின் கடைசி பத்தியில் வரும் உரையாடல் சான்று.

**தன்னிலை மாறாமை**: (நடுநிலைமை)

அநிருத்தர் மேல் மக்கள் குறை கூறுவதை அவரிடம் சொல்வது, இந்த அவரின் குணத்திற்கு எடுத்துக்காட்டு. பழுவூர் இளையராணி நந்தினியின் உடன்பிறாவா சகோதரனான ஆழ்வார்க்கடியான், அவளுடைய கெட்ட எண்ணங்களை தெரிந்து கொண்டதும் அதனை தீமை என்று எடுத்து சொல்லி அவளை நல்வழிப்படுத்த முயற்சிக்கிறார்.

**நன்மதிப்பு**:

அனைத்து கதை மாந்தருடன் உரையாடும் ஆழ்வார்க்கடியான், சோழ பேரரசின் செல்வாக்குமிக்க இரு பெண்மணிகளான பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி, இளைய பிராட்டி குந்தவை ஆகிய இருவரிடமும் நன்மதிப்பு பெற்றவர். யானை பாகனாக வரும் அருன்மொழிவர்மரை முதலில் அடையாளம் காணும் நம்பி, அவரின் அன்பை பெற்றவர். பெரிய பழுவேட்டரையரின் வெறுப்பை ஆரம்பத்தில் சம்பாதிக்கும் ஆழிவார்க்கடியான், பின்னர் அவருடைய நன்மதிப்பை பெறுகிறார்.

**முடிவுரை**:

அமரர் கல்கியின் காலத்தை வென்ற காவியமான “பொன்னியின் செல்வன்” என்ற இவ்வரலாற்று சிறப்புமிக்க புதினம் தமிழர்களுடைய வாசிப்பு பழக்கத்தை அடுத்த தளத்திற்கு எடுத்து சென்றது என்றால் அது மிகையாகாது. உலகத்தமிழர் அனைவரும் போற்றி கொண்டாடி வரும் இப்புதினத்தின் கதை மாந்தரான ஆழ்வார்க்கடியான் நம்பியின் கதாபாத்திரத்தை பற்றிய ஒரு புதிய பரிமாணத்தை இக்கட்டுரை எடுத்துரைக்க இயலும் எனக் கருதுகிறேன்.

ஆழ்வார்க்கடியான் நம்பியின் தோற்றம், இயல்புகள், பண்புகள், மதிநுட்பம் ஆகியவற்றை இயன்றவரையில் படம் பிடித்து காட்டும் நோக்கோடு இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

**முதன்மை நூல்**:

1. அமரர் கல்கி, பொன்னியின் செல்வன், முதல் பதிப்பு 2010, நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்.

**அடிக்குறிப்புகள்**:

1. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பதிப்பு 2013, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ப-2.
2. மேலது, ப-147.
3. அமரர் கல்கி, பொன்னியின் செல்வன், முதல் பதிப்பு 2010, நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், பாகம் 1 “புது வெள்ளம்”, அத்தியாயம் 2 “ஆழ்வார்க்கடியான்”, ப-9.
4. மேலது, பாகம் 4 “மணி மகுடம்”, அத்தியாயம் 4 “ஐயனார் கோவில்”, ப-391.
5. ப. பகலவன், திருக்குறள், முதல் பதிப்பு 2003, கணபதி பிராசஸ், அதிகாரம் :ஒற்றாடல்”, ப-129.